அது செல்லாது என்று போட்டிருக்கிறார்கள். அதனால் தான் தொல்லை கள் வருகின்றன. அதற்கான ஒரு தனிக் குழு போட்டு இதையெல்லாம் ஆராய்ந்து வருகிறோம்.

(ஆ) திருச்சி மாவட்டத்தில் நெல், அரிசி விலை உயர்வு குறித்து.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்கு அறுவடை சமயத் திலும் நெல், அரிசி விலைகள் கூடுதலான தொகைக்கு விற்கப்படுவதாலும், மேலும் விலை உயரும் சூழ்நிலை உள்ளதாலும் அவ்விலை ஏற்றத்தைத் தடுத்து நிறுத்தவேண்டியது பற்றிய அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இறுதியில் வட கிழக்கு பருவக் காற்று தவறியதன் காரணமாக போதிய அளவு மழை இல்லாமல் உணவுப் பொருள் உற்பத்தி பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் திருச்சிராப்பள்ளி மாவட்டமும் ஒன்றாகும். திருச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு தொடக்கத்தில் அறுவடை ஆகியுள்ள நெற்பயிர் மட்டுமல்லாமல் ஏனைய சிறுதானிய பயிர்களும் ஓரளவு பாதிக்கப்பட்டு இருக்கின்றன. நெல் கொள்முதல் விலை உயர் வினாலும் மற்ற இன்றியமையாப் பொருள்களின் விலையேற்றத்தினாலும் பற்றாக்குறை மாவட்டங்கள் பலவற்றில் இவ்வாண்டு தொடக்கத்திலிருந்து நெல் விலைகள் ஏறுமுகமாக காணப்பட்டன. திருச்சி மாவட்டத்திலும் 1974 ஜனவரி திங்களில் இவ்வாறான நிலை இருந்து வந்தது. இம் மாவட் டத்தில் 1974 பிப்ரவரி திங்களில் சம்பா பயிர் அறுவடைக்கு வந்தது. அறுவடையையொட்டி அத்திங்கள் முழுவதிலும் நெல்விலைகள் இறங்கு முகமாக இருந்தன. ஆனால் நெல் கண்டு முதலில் பற்றாக்குறை ஏற்பட்டதாலும் சந்தைகளில் நெல் வரவில் குறைவு இருந்தமையினாலும் இம்மாத தொடக்கத்திலிருந்து நெல் விலைகள் மறுபடியும் உயரத் தொடங்கின. வழக்கத்திற்கு மாறான இந்நிலையை கண்ணுற்று திருச்சி மாவட்டத்திற்கு தஞ்சை மாவட்டத்திலிருந்து தனி வணிகர்கள் மூலமாக நெல் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டது. இதுகாறும் 5,760 டன் நெல் தஞ்சையிலிருந்து இறக்குமதி செய்ய தற்போதுள்ள உரிமம் பெற்ற வணிகர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு நாளது தேதி வரை 747 டன் நெல் இம்மாநிலத்திற்குக் கொண்டுவரப்பட்டு வழங்கப்பட்டது. தாளடி நெற்பயிர் அறுவடை இம்மாவட்டத்தில் காவிரி பாசனமுள்ள எல்லா இடங்களிலும் தொடங்கியுள்ளது. ஓரளவு ஏறுமுகமாக இருந்த நெல் விலைகள் இப்பொழுது சரிந்து கொண்டு வருகிறது. அறுவடை தொடர்ந்து நடைபெறுவதால் நெல் விலை மேலும் கணிசமான அளவு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களின் அறிக்கையில் நெல் விலை சரிந்து கொண்டிருக்கிறது என்று கூறினார்கள். நான் சென்றவாரம் கூட ஊருக்குச் சென்றிருந்த

பொழுது முன்பு கலம் 50 ரூபாய் விற்ற நெல் இப்பொழுது 60 ரூபாய்க்கு விற்கிறது. ஆகவே, உயர்ந்துகொண்டிருக்கும் விலையைத் தடுக்க இனி மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அதற்கான நடவடிக்கையெடுத்து தஞ்சாவூரிலிருந்து 5,000 டன்களுக்கு மேல் கொண்டு செல்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. எப்பொழுதுமே அறுவடைக்கு முன்னால் விலை கொஞ்சம் ஏறும். அதுபோலத்தான் ஏறியிருக்கிறது. சென்ற திங்களை விட இப்பொழுது ஐந்து ரூபாய் குறைந்திருப்பதாக நேற்றுவரை தகவல் இருக்கிறது. நாங்கள் எடுத்த நடவடிக்கைகளின் மூலம் வெகு விரைவில் குறையலாம் என்று நம்புகிறேன்.

3. அறிக்கை அளித்தல்

அரசினர் உறுதிமொழிக்குழுவின் ஆறாம் அறிக்கை

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவரவர்களே, அரசினர் உறுதி மொழிக் குழுவின் ஆறாம் அறிக்கையை (ஐந்தாம் சட்டப் பேரவை) அளிக்கிறேன்.

4. நடைமுறைக் கேள்வி

பேரவைத் தலைவர் மீது கொடுக்கப்பட்ட உரிமைப்பிரச்சினை அறிவிக்கை குறித்து தகவல் கோரல்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், இன்று காலையிலே மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் மீது ஒரு பிரிவிலெஜ் மோஷனை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இந்த அவைக்குப் புறப்படும் நேரத்தில் மாண்புமிகு தங்கமணி என்று நினைக்கிறேன், என்னுடைய அறைக்கு வந்து கொடுத்திருக்கிறார்கள். அவைக்கு வந்ததற்குப் பிறகு சில உறுப்பினர்கள் கொடுத்து இருக்கிறார்கள். அதைப் பார்க்கக் கூட நேரமில்லை. என்ன கொடுத்திருக்கிறார்கள், அது அனுமதிக்கப்படக் கூடியது தானா, பிரிவிலெஜா என்று கூடப் பார்க்கவில்லை. கொடுத்திருக்கிறார்கள், ஆனால் அதற்காக பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுப்பி, அது என்ன ஆயிற்று என்று கேட்பது முறையல்ல.

திரு. ஏ. சுப்பிரமணியம் : நானும் திரு. தங்கமணி அவர்களும் கொடுத்திருக்கிறோம். அதைப் பற்றித் தலைவரவர்கள் என்ன சொல்கிறார்கள். நேற்று நடந்ததைப்பற்றி........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான அவைக்குப் புறப்படும் நேரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் இங்கே வந்ததற்குப் பிறகு சிலபேர் கொடுத்திருக்கிறார்கள். அது என்ன என்று பார்க்கக்கூட நேரமில்லை.